304

பதிவு என்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-7 குருதலம், மாம்பாக்கம்; மன்மத, வைகாசி உஎ 10—6—55 தளிர் 36

MADRAS

304
3-55

வடதிருச்சிற்றம்பலம்

(அருட்கவி-சேதுராமனார்)

(பேரூர்—கனக சபையில் பாடியது)

ராகம்: பூபாளம்; ஆதி தாளம்.

*முடக்கம் பலரொடு மோலியில் தரித்தவர்
அடக்கம் பலருக்கும் ஆய்ந்தருள் செய்பவர்
வடக்கம் பலமோடு தென்திருத் தில்லையும்
குடக்கம் பலயிசைக் கூத்தன் குலவுமே.

(ஆண்டார்குப்பத்திற் பாடியது)

ராகம்: புன்னாகவராளி.

†எருமணப் புட்பம் புனைமார்பா!
எழில்வனத் திற்சென் றெயின்மாதைத்
திருமணத் தைப்பண் டருள்வோனே
திருமுகத் தைக்கண் டிடுவேனோ!
மருமணத் தைக்கண் டளிபாடும்
வடதிருச் சிற்றம் பலவாணா!
பெருமணத் துப்பைங் குழலாள்சேய்
பிரமனைக் குட்டும் பெருமாளே!

---

* முடக்கு-கூன்பிறை; அம்பு-ஜலம்; அலர்-மலர்.

† எருமணம்-செங்குவளை.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ. 4	0	0
வெளி நாடு	ரூ. 6	0	0
தனித் தாள்	0	1	0

ஆயுள்—
கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

மூகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை	மன்மத, வைகாசி,	தளிர்
7	10-6-55 வெள்ளி.	36

முயல்வோம் வெல்வோம்

தமிழ் மிக மிகத் தொன்மை வாய்ந்ததாகலின் கலைச் சொற்கள் பெரும்பாலும் கிடைத்துவிடும். அவ்வாறு காண இயலாவிட்டால், தற்சமயத்துக்கு ஆங்கிலத்தில் வழங்கிவரும் கலைச் சொல்லையே வைத்துக் கொள்ளலாம். நாளடைவில் மாற்றம் செய்துகொள்ள இடமிருக்கிறது. தமிழில் அரிசி "என்றிருப்பதுதானே ஆங்கிலத்தில் "ரைஸ்" ஆயிற்று 'காட்டு மரம்' என்பதற்கு ஆங்கிலத்தில் (Catamarans) என்பதை அறிவோமன்றோ? பிற மொழிகளினின்று கடன் வாங்கி வளர்ந்த ஆங்கில மொழி இன்று பன்னாட்டு (International Language) மொழியாகவில்லையா? அவ்வாறே தமிழிலும் தற்காலிகமாகப் பிறமொழிக் கலப்பு ஏற்பட்டால் அதில் ஒன்றும் பாதகமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறோம். தனித் தமிழ் தூய தமிழ் என்று கூறி, பிறமொழிப் கலப்பு அடியோடு இல்லாமலிருந்தால், ஒரு மொழி விரைவில் வளரமுடியாது. எனவே மொழி வளர்ச்சிக்கு அவசியமான பிறமொழிக் கலப்பு ஒரு குறிப்பிட்ட அளவில் ஏற்கலாம் என்பதை வலியுறுத்துகிறோம்.

எனவே தமிழ்மொழியின் மூலம் இப்போதே பாடங்களைக் கல்லூரிகளில் நிகழ்த்தலாம் என்பதில் இடையூறேதுமில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் போதனமொழியாக வைத்த அளவிலேயே தமிழ் மொழி இவ்வளவு தூரம் ஆக்கம் பெற்றுவிட்டதென்றால், இன்னும் பல்கலைக் கழகத்தில் முதன்மொழி யாக்கப் பட்டால் தமிழ் மொழியின் எதிர்காலம் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை.

இன்று தமிழ் நாட்டில், தமிழார்வம் கொண்ட தகைமையோர் பலராக இருக்க, தமிழின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். தமிழிலா இசை (சங்கீதம்) இருப்பது? தமிழ் மொழியிலா பாடம் போதிப்பது? தமிழ் மொழியிலா அரசியற் பணிகளைப் பார்ப்பது? தமிழிலா அர்ச்சனை புரிவது? என்று இன்ன பிற கேள்விகள் போட்டுக் குட்டை குழப்பி வரும் இவர்களை நாம் தள்ளி வைத்து, தமிழார்வம் கொண்ட அறிஞர்களின் தலைமையில் ஒன்று கூடி, தமிழை முதன் மொழியாகச் செய்ய முனைவோம்.

முக்கியமாக, தமிழ்க் கல்லூரிகள் பலவற்றைத் தமிழ் நாட்டில் தோற்றுவித்தால் தமிழின் செல்வாக்கு உயரும். இதற்கு முக்கியமாக அரசியலார் ஆதரவு காட்ட வேண்டும். சங்க காலத்தில் எவ்வாறு மன்னர்கள் புலவரைப் போற்றி அவர்கள் யோசனையை நாடினார்களோ, அவ்வாறு, இந்நாளில் திகழும் தமிழறிஞர்களை ஊக்கும் வகையில், அவர்களைச் சிறப்பித்து, தமிழ் தழைக்க அவர்கள் கூறும் வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

'தமிழ் நாடு' 'தமிழர்' என்ற உணர்ச்சி தமிழரிடையே வெகுவாகப் பரவியிருக்கும் இக்காலமே இதற்கு ஏற்ற காலம். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள முயல்வோம் இம்முயற்சிகட்கு அரசியலார் ஆவன செய்வர் என்று நம்புகிறோம்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழர்!

T N. அருச்சுனன்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வனவற்றில் ஐயுறவு கொள்ளக் கூடாது; கொண்டால் "தீரா இடும்பை தரும்" என்று திருவள்ளுவர் தெரிவிக்கிறார்.

யாரை அப்படி ஒப்பற்றவராகத் தேர்ந்து கொள்வது என்றும் யாரும் கிடைக்கவில்லையே என்றும் எண்ணமிருக்குமாயின், மறைந்து விட்டவர்களில் ஒருவரைக் குருவாகக் கொள்ளலாம்.

திருவள்ளுவரைக் குருகுலத்தார் குருவாகக் கொண்டுள்ளனர். அவர் கூறுவனவற்றில் தவறு என்று இதுவரை ஒன்றைக் கூட யாரும் நிறுவவில்லை அவரை ஐயம் கொள்ளாமல் குரு என்று யாரும் கொள்ளலாம், இந் நாட்டினரே யன்றி எந்நாட்டவரும் கொள்ளலாம். அவரைக் குரு என்று கொண்டு விட்டால் அவர் சொன்னபடி நடக்க வேண்டும். பின்னரும் அவர் கூறுவனவற்றில் இது எனக்குப் பிடிக்கவில்லை யென்று சொல்லவே கூடாது. அவரைத் தேர்ந்து குருவாகக் கொள்வதற்கு முன்னர் வேண்டுமாயின் எவ்வளவு குறையும் சொல்லிக்கொண்டிருக்கலாம். பின்னரும் கூறுவராயின் இன்னும் நன்றாய்த் தேறவில்லை யென்று தான் உணர வேண்டும்." இவ்வாறு பேசினர்.

மறுநாட் காலையில் ஆசிரியர் அக் கோவிலிலேயே திருவடிப் பூசை விசேஷ அபிஷேகங்களுடன் செய்து வழிபட்டனர். வழிபாட்டிற்குப் பின்னர்த் திருவடியைப்பற்றி விளக்கிப் பேசிவிட்டு அப்பர் சுவாமிகள் பாடிய திருவடித் திருத் தாண்டகத்தில் ஒரு பாடலுக்கு விரிவுரையும் நிகழ்த்தினர்.

அவ்வமயம் கூறியதாவது: "நேற்றுப் பேசிய பேச்சு பொதுவானது இன்றைய பேச்சு சிறப்பானது. இத் திருவடி இறைவன் திருவடி. இரண்டு பாதக் குறடுகள் இதில் உள்ளன. அவற்றின்மேல் இறைவன் திருவடிகள் உள்ளன. இறைவனுக்குப் பாதக்குறடு என்பது வேதம். பாதக் குறட்டின் மேல் இறைவன் திருவடி உள்ளது என்பது வேதத்தின் முடியில் இறைவன் இருப்பதைக் குறிக்கும்.

தெரிந்த ஒருவர் தெரியாத ஒருவரை இப்படி யிப்படி இருப்பார் என்று கூறும்போது நாம் புரிந்துகொள்வது எப்படியோ அப்படியே வேதத்தில் இறைவனை அறிவது. நேரில் போய்ப் பார்த்தபோது எப்படித் தெரிந்து கொள்கிறோமோ அப்படித் தெரிந்து கொள்வது ஆகமம் மூலமாக அநுபவத்தில் தெரிவது.

இறைவனுக்கு மந்திரம் உடம்பு. ஒருவரை நாம் பார்த்துப் பயனடைய வேண்டுமாயின் அவர் ஆன்மாவை மட்டும் தனித்துக் கவனிக்க முடியுமா? அல்லது ஆன்மா பிரிந்து போன பின்னர் அவர் உடம்பைக் கொண்டுதான் பயன் அடைய முடியுமா? ஆன்மாவும் உடம்பும் கலந்திருக்கும்போது உடம்பு நம் புலனுக்கு எட்ட அவரைக் கண்டு பயன் அடைகிறோம். அதுபோலே அதிநுட்பமான இறைவனைச் சிறிதளவேனும் ஸ்தூலமான உடம்பிற்குக் கொண்டுவந்து காணவேண்டும். அதற்கு மந்திரங்கள் உதவும். வேதம் அப்படிப் பட்டது. தமிழில் தேவார திருவாசகம் வேதம். அவற்றிலிருந்து சில பாடல்கள் கூறி வழிபட்டால் அவனை அடைந்துபயன் பெறலாம்" இவ்வாறு பேசினர்.

நன்றியுரையுடனும் வாழ்த்துடனும் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

—முத்துசாமி.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையுமாகும். மொழிவாரி மானிலப் பிரிவு இந்தியாவைப் பலவீனப் படுத்திவிடும் என்று எண்ணுவதற்கு வெறு அச்சந் தான்காரணமே தவிர, அது உண்மையன்று; மாறாக நல்ல வலிவே உண்டாகும்.

இனி, இத்தகைய மொழிவாரிப் பிரிவுகளை, இன்றைய நிலையை மட்டுமே பார்த்துச் செய்துவிடுதல் கூடாது. உணர்ச்சிக்குப் பழைய நிலைகளே தவிர அன்றைய நிலைகளல்ல. ஆகவே இயற்கை வரம்பு, இலக்கியச் சான்று, கல்வெட்டுச் சான்று, இவற்றோடு இன்றைய நிலையையும் ஓரளவு பார்க்கலாம். அதிற்கூட இன்றைய நிலை என்பது, ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட நிலை. ஏன் என்றால் அவர்கள் தம் ஆட்சிக் காலத்தில் தம் வசதிக்குத் தம் விருப்பம் போல் ஏதேதோ செய்து விட்டதை ஒட்டி ஏற்பட்ட மாறுதல்கள். அண்மையில் திட்டமிட்டுச் செய்யப் பெற்ற மாறுதல்கள், தவறான கணக்குகள் எல்லாமே இதில் பார்க்கப்பட வேண்டும்.

தான், தன் பெற்றோர், உற்றோர், தன் ஊர், வட்டம் மாவட்டம், மாநிலம், நாடு தேசம் என்றுதான் படிப்படியே உள்ளம் விரியும். இவ்வியற்கையை உணராமல் இவைகளில் எல்லாம் கருத்துவைக்காமல் குறுகிய மனபான்மை என்று விலக்கிவிடுதல், நல்லதல்ல.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)

ஒப்பந்தம் என்றால் கொள்வதும், கொடுப்பதும், அதற்கான நிபந்தனைகளும் உண்டல்லவா? ஆம், இந்த "வாழ்க்கை ஒப்பந்தத்திற்கும்" அவையெல்லாம் உண்டு.

"நான் வெளியில் சென்று பொருள் ஈட்டுவேன், நீ வீட்டி விருந்து உணவு படைப்பாய்; குழந்தைகள் பெறுவது உன் வேலை, அவற்றைக் காப்பாற்றுவது என் பொறுப்பு; இம்முறையில் இயன்றவரை வாழ்வோம், இல்லையேல், நீ விரும்பினாலும் நான் விரும்பினாலும் ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்ளலாம்; விலகிக் கொள்ள நிபந்தனைகள் இவை—" என்று கூடிப் பேசி, வழக்கறிஞரைத் தேடிப் பிடித்து, சாட்சிகளை முன்வைத்து, ஒப்பந்தத்திலே கை பொப்பமிட்டு, தங்களுடைய அருமையான வாழ்க்கையினை இனி துவங்குகின்றனர்.

எத்தகைய புதுமைக் கருத்துக்கள்! இவ்வளவையும் உள்ளடக்கி நிற்கும் அச் சொற்றொடரைத் தான் கவனியுங்களேன்: "வாழ்க்கை ஒப்பந்தம்"—சொற்கள் இரண்டும் தனித்தனியாகவே நிற்கின்றன. ஒட்டவில்லை; ஓர் உறவுமில்லை. ஆணும் பெண்ணும் அருகருகு சும்மா நிற்கின்றனர். உள்ள உறவில்லை, மனங்கலக்க, உயிர்கலக்க வழியில்லை. சொற்றொடரே காட்டி விடுகிறது, தன் அவலத் தன்மையை.

"மலர் முகிழ்த்து, மணம் பிறக்கும் நிலையினைக் காட்டும் அப் பழஞ் சொல் எங்கே! ஒப்பந்தம் பேசிக் கூடுகின்ற நிலையைக் காட்டும் இப் புதுச் சொற்றொடர் எங்கே!!

இந்த அருமையான சொற்றொடரைத்தான் ஒரு சிலர் வழக்கத்தில் புகுத்த முனைந்துள்ளனர். ஏனெனில், புதுமை வேண்டுமாம், புதுமை! பழமை அலுத்து விட்டதாம்!

புதுமை வேண்டியது தான், மறுப்பில்லை. உலகோடு ஒட்ட ஒழுகல் வேண்டும் என்பது வள்ளுவர் அறிவுரை. உலகம் முன்னேறுகின்ற வேகத்திலே நாமும் ஒன்றி முன்னேற வேண்டும். சிறிது பின் தங்கினாலும் இடர்ப்படுவோம். இந்த முன்னேற்றத்திலே இடையூறாகச் சில பழமைத் தளைகள் இருந்தால் அவற்றைக் களைய வேண்டியது தான். பழமைக் கருத்துக்கள், பழக்கங்கள் சில இன்றைய நிலைக்கு ஒவ்வாவிடின் அவற்றை விடுத்து, புதியன கொள்ள வேண்டியதுதான். ஆனால், பழமையை, பழமை என்பதற்காகவே, அதன் சிறப்பினைக் கருதாது தள்ளி விடுவதும், புதுமையை அது எத்தன்மையதாயினும், அதன் புதுமை ஒன்று கருதியே கொள்வதும், கண் மூடித்தனம். காலம் எவ்வளவுதான் மாறினும், பழையன எவ்வளவு கழிப்பினும், புதியன எத்தனைப் புகுத்தினும், ஒரு பண்பாடுற்ற இனத்தின் அடித்தளம் என்றும் மாறக் கூடாது. அந்த அடித்தளத்தில் வேரூன்றியபடி, புதுமையை எவ்வளவுதான் பரந்து தழுவினும் அதன் வளர்ச்சிக்கு ஊறில்லை. அன்றி, வேரினின்றும் விட்டு, புதுமையைத் தேடி ஓடும் நிலை, கைக் கயிறு அறுந்த பட்டத்தின் நிலைதான்.

இத்தகு கண் மூடித்தனமான புதுமை வெறியே, திருமணத்தை வெறு மணமாக்கி, அதிலும் மணத்தை நீக்கி, அதனை வெறும் வாழ்க்கை ஒப்பந்தமாகச் சுருக்கி விட்டது; ஒரு வாணிபச் சொல்லாகவே ஆகிவிட்டது.

எனவே, "திருமணம்" எனும் கவிதைச் சொல்லிருக்க, "வாழ்க்கை ஒப்பந்தம்" எனும் அவலச் சொல்லினைப் புகுத்துவோரை, வள்ளுவர் சொல்கிறபடி, கனியிருப்பக் காய்பறித்துண்ணும் கருத்தற்றவர் என்பதா? அன்றி, மழலை கொஞ்சும் மகவு இருக்க, மண் பொம்மையினைக் கொஞ்சிக் கிடக்கும் மதியினர் என்பதா? இல்லை, தென்றலடிக்கையில், வெண்தணலை நாடிச் செல்லும் வீணர் என்பதா? வேறென்னென்பது?

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

கனியிருப்ப--

(பா. கோவிந்தராசன்.)

தீஞ்சுவைக் கனிகள் இருக்க அவற்றை விடுத்து, பச்சைக் காயினைப் பறித்து உண்பவனை என்னென்போம்? அவனது அறியாமையை எள்ளி நகையாடுவோம். இனிய சொற்கள் இருக்க இன்னாச் சொல் பேசுவோனை, கனியிருப்ப, காயைப் பறித்துண்ணுவோனுக்கு உவமையாக்குகின்றார் வள்ளுவர்.

ஆனால், இன்று புதுமை மோகத்தால் உந்தப்பட்டு, புதியனவெல்லாம் போற்றுதற்குரியனவே எனும் போக்கில், நம் மரபையும் மறந்து, அம் மரபின் வழி நமக்குக் கிடைத்துள்ள மொழிவளம், அம் மொழி காட்டும் நம் மனவளம்—இவற்றினையும் அறியாது, புதிய சொல் தேடித் திரிவோரை என்னென்று அழைப்பது?

ஒரு சொல்லிலே நமது பண்பின் முதிர்ச்சியையும், வாழ்க்கை முறையினையும் காட்டிவிடும் வளமிக்கது நம் மொழி; அம் மொழியிலே பொருள் பொதிந்த சொற்களோ ஏராளம். அவற்றிலும் பெரும் பான்மையன காரணப் பெயர்கள். ஒவ்வொன்றும் நுணுக நுணுகப் புதுப் புதுப் பொருள் தரும் கருவூலம். அதிலும், ஏட்டிலே மட்டுமன்றி நாட்டினர் நாவிலும் நடமிடும் சொற்கள் அனந்தம்; பழகிப் பழகி மெருகேறி நிற்கும் சொற்களோ வெகுபல.

எனவே, இத்தகு வளமிக்க சொற்கள் இருக்க, புதுமை விழைந்தோ, புதுப் பொருள் கருதியோ, அன்றிப் பழமை அலுத்தோ, ஏது கருதியோ, ஏது பற்றியோ; ஒரு சிலர் வாழ்க்கை அமைப்பு முறையினைக் காட்ட வழி வழி வழங்கி வருகின்ற சொற்களை விடுத்து, அவற்றிற்கு நேரான சொற்களைத் தேடி, தாமே ஆக்கி, அவற்றைக் கையாள்கின்றனர். இவ்விதம் அவர்கள் ஆக்குகின்ற சொற்கள் வழங்கிவரும் சொற்களை விட வளமானவையாக இருப்பின் ஏற்றுக்கொள்வதிலே தவறில்லை. தவறில்லாதது மட்டுமல்ல, இது மொழிக்குப் புது வளம் தரும் புனித முயற்சியாகவும் போற்றப் பெறும். ஆனால், இத்தகு புதுமைச் சொற்கள் பல, அவற்றிற்கு நேரான வழக்கிலுள்ள சொற்களுக்கு எவ்விதத்தும் இணையானவை அல்ல என்பது மட்டுமன்றி, அவற்றின் அருகிலும் வர அருகதை அற்றனவாயும், மேல் நோக்கிலேயே தம் அவலத் தன்மையைக் காட்டி விடுவனவாயும் உள்ளன. இதற்குப் பின் வரும் ஓர் எடுத்துக் காட்டே சாலும்:

ஆணும் பெண்ணும் இசைபட இல்வாழ்க்கை மேற்கொள்ள வேண்டி இணைகின்ற விழாவினைக் குறிக்க ஒரு சொல், ஒப்பற்ற சொல், எம் மொழியிலும் காணக்கிடைக்காத ஏற்றம் மிகுந்த சொல், நம் மொழியில் உண்டு. அதுவே "திருமணம்" எனும் அழகு உமிழும் சொல்.

திருமணங்கொண்ட பின்னர்தான், ஆணின் வாழ்க்கையும், பெண்ணின் வாழ்க்கையும் மலர்ந்து மணம் வீசுகிறதாம். வாழ்க்கை ஒரு மலராம்; அது திருமணம் என்கின்ற வேளையிலே மலர்கிறதாம்; மணம் வீசுகிறதாம்—இனிக் கனியும் பிறக்குமாம். கதிரவனின் பொன்னொளி, வண்ணத் தாமரையை மலர்விப்பது போல், வெண்ணிலவின் தண்ணொளி, அல்லியின் மடலவிழ்ப்பதே போல், திருமணம் எனும் விழாவும் வாழ்க்கை மலரை மலர்விக்கிறதாம்; மணம் கமழச் செய்கிறதாம். என்ன அழகிய கற்பனை! எத்தகு வளமிக்க சொல்! சொல்லே, ஒரு கவிதை!! ஆம்! ஒரே சொல்லில் ஒரு கவிதை!! எம் மொழிக்கு வரும் இவ்வளம்? எம் மொழியில் உண்டு, இதற்கு நிகரான சொல்?

அதிக நாள் வழங்கி விட்டதால் இச் சொல்லிலே மணம் அற்று விட்டது என்றெண்ணியோ, அன்றிப் பழமையை வெறுத்தோ, என்னவோ, புதுமை விரும்பிகள் சிலர், புதுமைக் கருத்துக்கள் எதிரொலிக்க வேண்டும் எனும் எண்ணத்தில், தேடித் திரிந்து இச் சொல்லுக்கு 'நேராக' ஒரு சொல் கண்டனரா—இல்லை, ஒட்டுவேலை செய்து சொற்றொடரை ஆக்கியுள்ளனர்.

புரட்சி காணும் முயற்சியில் பிறந்த அப் புதுமைச் சொற்றொடர், இதுதான்: "வாழ்க்கை ஒப்பந்தம்"

ஏன் முகம் சுளிக்கின்றீர்கள்? "போர் நிறுத்த ஒப்பந்தம்", "போர் மறுப்பு ஒப்பந்தம்", "வாணிப ஒப்பந்தம்"—இவை யாவும் நினைவுக்கு வருகின்றனவா? ஆம், இவை போல் தான், ஆணுக்கும் பெண்ணுக்கும் ஓர் ஒப்பந்தம்; அது வாழ்க்கை ஒப்பந்தம்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

போயிருக்கின்ற மரங்களின் பின்னே கள்வர் மறைந்து நிற்பர். வழியில் வருவோர் போவோர் பொருளையும் உயிரையும் ஒருங்கே கவர்வர். பொருள் இல்லையேல் வெட்டப்பட்ட உடல் துள்ளுவது கண்டு மகிழ்வர். அப்படிப்பட்ட கல் மனம் கொண்ட கள்வரும் இசையால் மயங்குவர். பாலை வழியாகச் செல்லும் பொருநர் என்போர் பாலைப் பண்ணைப் பாடிச் செல்வாராயின், அக் கள்வர் தம் கையிலுள்ள ஆயுதங்களை நழுவ விட்டு, தம் கொலைத் தொழிலையும் மறந்து இசையில் ஈடுபட்டு இன்புற்றுத் தம்மை இழந்து நிற்பராம். இதனையே "ஆறலைக் கள்வர் படைவிட அருளின் மாறுதலைப் பெயர்க்கு மருவின் பாலை" என்ற பழம்பாட்டொன்று விளக்கும்.

இத்தகு இசையின் பெருமையை விரிக்கின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும். சங்க நூல்களிலேயே யன்றிச் சங்க கால நூல்களான சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலும் பிற்கால நூல்களிலும் இதுபற்றிய விவரங்களை விரிவாகக் காணலாம்.

இப்படிப்பட்ட பழம் பெருமை கொண்ட தமிழிசை இடைக்காலத்தில் போற்றுவாரின்றி மறைந்தது. செட்டிநாட்டு மன்னர் திரு. அண்ணாமலை செட்டியார் அவர்களின் குன்றா உழைப்பாலும் பேருக்கத்தின் பயனாலும் மீண்டும் தமிழர்க்கெனத் தனியிசையும் அவ்விசைக்காக ஒரு கல்லூரியும் ஏற்படுத்தப்பட்டு அங்குக் கற்றுத் தேர்வார்க்குப் பட்டங்களும் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தமிழர் என்றும் அவருடைய பெருந் தொண்டிற்குப் பெரிதும் கடமைப்பட்டவராவர்.

இழந்த கலைகளை மீண்டும் தேடிப் பெறுவதும், இருக்கும் கலைகளுக்கு ஆக்கந் தேடுவதும் தமிழரின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடிகோலுவதாம். இத்தகைய முயற்சியில் ஈடுபடுவோர்க்குப் பழந்தமிழிலக்கியங்கள் பெரிதும் துணைபுரியும். ஆகவே, வாழ்வில் வளம் காண விழையும் தமிழர், பண்டைத் தமிழகத்தைச் சிறிதே திரும்பிக் கண்டு செயலில் ஈடுபடுவார்களாக!

அறன்வலி யுறுத்தல்

(சி. தாமோதரம்)

மனிதன் கூடிவாழும் இயல்புடையவன்; தனித்து வாழ்தலென்பது இயலாது. அதனாலே மக்கட்குழு அமைக்க வேண்டிய இன்றியமையாமை அவனுக்கு ஏற்பட்டது. அதன் தொடர்பாக நாகரிகம், பண்பாடு ஏற்படலாயின. அறத்தின் அடிப்படையிலே இவை எழுவதாகும். அவ்வறன் வலி யுறுத்தலைப் பற்றியதே இக் கட்டுரையின் நோக்கம்.

அறமாவது யாது? மனத்துக்கண் மாசு இல்லாதிருத்தல் அறம். இங்கு அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவையே மாசு என்பதனை வள்ளுவப் பெருந்தகையின் பிறிதொரு குறட்பா நமக்குப் பறைசாற்றி அறிவிக்கின்றது. அதாவது ஒருவன் செல்வம் கண்டு மனம் புழுங்குவது, அதனைப் பெற வரம்பு மீறிய அவாக் கொள்வது, அது கிட்டாவிடத்துச் சினங் கொள்வது, அதன் வழி இன்னாச் சொல் பிறப்பதுமாகிய இவை மனத்திடத்துக் குற்றமுடையார் மாட்டுத் தோன்றுவவாகும். இத்தகைய தீய குணங்கள் ஒருவனிடத்துக் கால் கொள்ளாதிருக்க விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

அஃது எப்படி? ஓரொருகால் அரும்பும் நல்லெண்ணத்தை மீண்டும் மீண்டும் நினைந்து அவ்வாறே ஒழுக வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாமென விட்டுவிடாமல், இடையறாது அறவழியில் யாவற்றையும் செய்ய வேண்டும். அதாவது இளமை தொட்டே அறம் செய்ய வேண்டும் என்பதாம்; "அறஞ் செய விரும்பு" என்ற முதுமொழியும் இது பற்றியே எழுந்தது.

அறமே ஒருவனுக்கு இறவாச் சிறப்பையும், செல்வத்தையும் கொடுக்கும். அதுவே உயிர்க்கும், உடலுக்கும் உறுதிபயக்கும் பற்றுக்கோடாகும். பிறப்பு வழியை அடைக்கும் தடைக் கல்லாக அமைவதுமாகும். எல்லா இன்பத்திற்கும் கருவூலமாகிய அறத்தை மறப்பது முழுக் கேட்டிற்கும் வித்திடுவதாகும்.

ஆகவே அற நெறியில் யாவரும் இயங்க வேண்டும்; அது பொது நெறி. அறவோராகும் வாய்ப்பு யாவர்க்கும் உண்டு; அதன் பெருமையை எடுத்துக் காட்டவே வள்ளுவர்,

"அறத்தா றிதுவென
வேண்டா, சிவிகை
பொறுத்தானோ
டூர்ந்தா னிடை"

கொண்டு இருக்கிறது. கோடைக் காற்று அவைகளின் உள்ளே புகுந்து வெளிவருவதன் மூலம் குழலிசையை எழுப்பிக்கொண்டிருக்கிறது. பாடுகின்ற அருவி நீரின் இனிய ஓசை பல முழவு சேர்ந்து எழுப்பும் இசையாக இயங்கிக்கொண்டிருக்கிறது. கலைமான்கள் பெருவங்கியம் என்ற இசைக் கருவியின் இன்னிசை போன்று ஒலி செய்து கொண்டிருக்கின்றன. பூக்களில் தேனுண்ணும் வண்டு யாழ் போன்ற இசை பாடுகின்றது. இப்படிப்பட்ட இனிய பல ஒலிகளைக் கேட்ட மயில் அரங்கில் நடனமாடும் விறலி போன்று அகன்ற பாறை மீது நின்று ஆடுகின்றது. குரங்குகள் இசையையும் நடனத்தையும் ஒருங்கே கேட்டும் பார்த்தும் வியந்தும் சுவைத்தும் இன்புற்றிருக்கின்றன. இந்த அழகிய காட்சியைத் தீட்டித் தரும் புலவர்—குறிஞ்சி பாடுவதில் மிகவும் வல்லவர் என்று போற்றப்படுபவர் ஆவார். அவரே கபிலர் என்பார்.

"ஆடமை குயின்ற அவிர் துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடியின் அருவிப் பயனீர் இன்னிசைத்
தோடமை குழலின் துதைகுரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத் தியலியா டும்மயில்
நவைப்புகு விறலியல் தோன்றும்!"

(அகம்: 82)

"தும்பி குழல் போன்று இசைக்கிறது. மழலை வண்டினம் யாழின் இசையை எழுப்பிக்கொண்டிருக்க மயில் அரங்கில் ஆடிக்கொண்டிருக்கிறது. மந்திகள் பார்த்துக் களிக்கின்றன." என்று மேற் சொன்ன அதே காட்சியைச் சாத்தனாரும் திறம்படத் தம் நூலில் "பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக் கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற், குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர் மயிலா டரங்கின் மந்தி காண்பன காண்" என்று அமைப்பர்.

நெஞ்சை உருக்கும் திறம் படைத்த இசையை அளிக்க வல்ல யாழ் பண்டைத் தமிழர்களிடையே மிகவும் சிறந்து விளங்கியது என்பதற்குச் சங்க நூல்களில் பல சான்றுகள் காண்கின்றன. யாழைச் செய்கின்ற முறையைப் பற்றி அழகாகக் கலித்தொகைப் பாட்டொன்று கூறுகின்றது. அதோடு நில்லாமல் அஃறிணைப் பொருள்களும் ஒன்றின் இசையில் ஒன்று மயங்கி மகிழ்ந்ததாகவும் பாடுவது எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

பெரிய சுறுமீனின் கொம்பால் யாழின் உறுப்பாகிய பலகை செய்யப்பட்டு, நெய்தற் பூவை நீண்ட நாரிலே தொடுத்து அழகு பெறக் கட்டிக் கையாலே வாசித்தலால் எழுகின்ற ஓசை போன்று வண்டுக் கூட்டங்கள் பாடும் பாட்டைக் கேட்டு மகிழ்ந்து மயங்கிய தாழையின் மலர் தேன் பிலிற்றுமாம்.

"எறிசுறு வான் மருப்புக்
கோத்து நெறிசெய்த
நெய்தல் நெடுநார்ப்
பிணித்தியாத்துக் கையுளர்வின்
யாழிசை கொண்ட
இனவண் டிமிர்ந்தார்ப்பத்
தாழா துறைக்குந்
தடமலர்த் தண்டாழை"

(கலி: 131, 7 10)

முல்லை நிலத்திலே மாலைக் காலத்தே சிதறி மேய்ந்துகொண்டிருக்கும் மாடுகளை ஒன்று சேர்க்க இடையர்கள் தங்கள் வாயில் குழலை வைத்து ஊதுவர், குழலின் இசையில் மயங்கிய அவை அவனைப் பின்தொடர்ந்து வீடு நோக்கி விரைந்து செல்லும் என்பதையும் நாம் பழந் தமிழ் நூல்களில் பாக்கக் காணலாம்.

இனி, வீணையின் இசைக்கு யானை அடங்கியதை உதயணன் வரலாறாகிய 'பெருங் கதை'யின் மூலம் அறிகிறோம். மதம்பட்ட யானை ஒன்று தெருவிலே கண்டோர் அஞ்சும்படி ஓடிக்கொண்டிருந்ததாம். அதை அடக்க உதயணன் தன் வீணையின் நரம்புகளை மீட்டி இனிய இசையை எழுப்பினனும். உடனே யானை ஆசிரியனுக்கு அடங்கும் மாணவன்போல அடங்கி நடந்ததாம். இதனையே ஆசிரியர் 'வீணை கெழீஇ வீதியி னடப்ப ஆணையா சாற்கடியுறை செய்யும் மாணி போல மதக் களிறும் படிய' என்று பாடுவார்.

பாலைவழி மிகவும் கொடியதாகும். அக்காலத்தில் நம்மவர் அக் கொடிய வழியில் சென்று அரும் பொருள் தேடிவந்து தம் சுற்றத்தாரையும் வறுமையில் உழலும் மக்களையும் பேணி வந்தனர் என்று அகநானூறு போன்ற நூல்கள் கூறும். கால்களைப் பதிய வைத்து நடக்க முடியாதபடி சுடுகின்ற பண்புடைய அவ்வழியில் உலர்ந்து

தமிழிசை

(தா. சா. மாணிக்கம்)

கலை மக்களின் நிலையை அளக்க உதவுங் கருவி இசை. ஒரு நாட்டின் கலைகள் அனைத்தும் உயர்ந்திருக்கின்றன என்றால் அந்நாட்டு மக்களின் நிலை உயர்ந்துள்ளது என்று பொருள். அத்தகைய கலைகளுள் ஒன்றாகிய இசைக் கலையின் இயல்பு பற்றியும் அது பயக்கும் இன்பம் பற்றியும் இவண் சிறிது நோக்குவாம்.

"ஓங்கலிடைவந் துயர்ந்தோர்
தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்
திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி
வெங்கதிரொன்று ஏனையது
தன்னேரில் லாத தமிழ்"

என்று சிறப்பித்துக் கூறப்படும் சீரிளமைத் திறம் வாய்ந்த செந்தமிழ் 'முத்தமிழ்' என்று வழங்கப்படுவதாகும். 'சங்கத் தமிழ் மூன்றுந் தா' என்பதே இளஞ்சிறார் வேண்டும் விழைவு. இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்னும் முக்கூறுகளே அம் முத்தமிழாகும். இம் மூன்றனுள்ளும் நடுவணதாகிய இசைத் தமிழ் மிகச் சிறந்ததொன்றாகும். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள்ளும் எங்ஙனம் பொருளின்றேல் அறத்தையும் இன்பத்தையும் இனிது சுவைத்தல் இயலாதோ அங்ஙனமே இசையின்றேல் இயலும் நாடகமும் சிறப்புறுமாறு இல்லை. உயர்திணைப் பொருள்களையே யன்றி அஃறிணைப் பொருள்களையும் ஈர்க்க வல்ல ஆற்றல் படைத்தது இசைத் தமிழாகும். இசையின்றி நாடகம் என்று கூறப்படும் கூத்து இயங்காததொன்றாகிறது—சுவை குறைந்ததொன்றாகிறது.

இசை என்னும் சொல் சேர் கட்டு கூட்டு என்ற பல பொருள்களில் வழங்கும். இசை, தன்னைச் செவிமடுத்தாரின் உள்ளத்தைத் தன்பால் இயைய வைத்து ஈர்த்துப் பிணிக்கும் ஆற்றலுடையது. இசை, தன்னைச் சேர்ந்தாரைக் கூட்டிக்கொள்ளும் வன்மை படைத்தது. இசை—தன்னை யடுத்தாரைக் கட்டுவிக்கும் தன்மையுடையது. ஆகவேதான் நுண் கலைகளில் சிறந்து விளங்கிய பண்டைத் தமிழர் இதற்கு இசையென்று பெயரிட்டு மகிழ்ந்தனர். காதைக் குளிர்விப்பதோடு நில்லாமல் கருத்தையும் கனிவிக்கும் இனிய ஓசையே இசை யெனப்படும். குயிலும் கிளியும் காரிகையின் கண்ணே என ஐயுறும்படியுள்ள அழகிய மலர்களிலிருந்து மதுவுண்ணும் வண்டும் இனிய ஓசையைச் செய்து நமக்கு இன்பமூட்டுகின்றன அவ்வண்ணமே, கடலிலே துள்ளிக் குதிக்கும் அலை—காரிகையின் கைகளிலே குலுங்கும் வளை—அவள் கால்களிலே ஒலிக்கும் சிலம்பு—குழந்தையின் மழலை—கோதையின் கொஞ்சு மொழி ஆகிய இவைகளிலிருந்து எழும் ஒலி காதிற்கு விருந்தாவதோடு உள்ளத்தைக் கனிவிக்கும் மருந்தாகவும் இலங்குவதை யாரே அறியார். 'வண்டு தமிழிசைக்கும்' என்னும் உரை எழுந்ததும் இதன் பொருட்டே யன்றோ!

மக்கள் தங்கள் நுண்ணறிவின் மாட்சியால் தோல், துளை, நரம்புக் கருவிகள் மூலமும் தங்கள் மிடற்றின் துணை கொண்டும் பல்வேறு வகையான இன்னிசையை எழுப்புகின்றனர். குழலின் இனிய குரலைக் கேட்டு மழலை பேசும் குழவியும் மகிழும். கழங்கு ஆடும் கன்னியர் எழுதா ஓவியம் என நிற்பர். அழலின் வெப்பத்தை ஆற்ற முடியாது அல்லல்படும் கொல்லனுடைய உள்ளமும் களிப்புக் கொள்ளும். இவை நாம் உணர்ந்தவை தாமே!

இனி இசைக் கலையின் சிறப்பைப் பழந்தமிழ்ப் பாக்களின் சான்று கொண்டு காண்போம்.

குறிஞ்சி நிலம்—அதிலே ஒரு தினைப்புனம்—அத் தினைப்புனத்திலே தினையைத் தின்ன வரும் பறவைகளையோட்டித் தினையைக் காக்க அழகாக அமைக்கப்பட்டிருக்கின்ற உயர்ந்த பரண்—அந்தப் பரண்மேலே ஒரு அழகிய பாவை நின்றிருக்கின்றாள்—அந்தப் பாவை அப்பொழுதுதான் பைஞ்சுனையில் நீராடி வந்திருக்கிறாள்—அவளுடைய கூந்தல் நனைந்திருக்கிறது—நனைந்திருக்கும் கூந்தலை உலர்த்திக் கொண்டிருக்கிறாள்—அந்த நிலையிலே அவளுடைய பவள வாய் ஒரு பைந்தமிழ்ப் பாட்டைப் பாடுகின்றது—அந்த வேளையிலே தினையைத் தின்னுவதற்கென்றே அங்கு வந்த ஒரு யானை அவளுடைய பாட்டிலே மயங்கித் தினையைத் தின்னாது மெய்ம் மறந்து நின்றுவிடுகிறது. இதையே அகநானூறு என்னும் சங்க நூல்,

"ஒலியல் வார் மயிர்
உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற்
குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது
நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண்
பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி
றுறங்கும் நாடன்"

என்ற இவ்வடிகளால் உணர்த்தும்.

வண்டு துளைத்த துளைகளோடு கூடிய மூங்கில், அசைந்து

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	செய, தை,	தளிர்
7	4-2-55 வெள்ளி.	18

தணிகை தரும் உணர்ச்சிகள்

திருத்தணிகை என்றதும் அன்பர் பலருக்கு 'முருகன்' நினைவும் உருக்கமும் (பக்தி) மட்டுமே உண்டாகின்றன. அதற்குக் காரணம் 'முருகன்' அங்கே உறைகின்றான் என்னும் வழக்குணர்ச்சியும் அவரிடத்து அவர்களுக்குள்ள ஈடுபாடுந்தான். ஆனால் எம்போன்ற தமிழ் இளைஞர்களுக்கு இப்போதுள்ள நாட்டுச் சூழ்நிலையால் அது தமிழகத்தில் சேரவேண்டுமே! இப்போது தவறாக ஆந்திரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதே என்னும் எண்ணந்தான் முதலில் தோற்றுகிறது. இதற்குக் காரணம் எங்களுக்குள்ள நாட்டன்பும் மொழியன்புந்தான்.

நாட்டன்பும் மொழியன்பும் குறுகிய மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு எழுவன, அவற்றைவிட உருக்க (பக்தி) உணர்ச்சி மேலானது என்று பெரியவர்களிற் கூடச் சிலர் சொல்ல முற்படுவார்கள்.

ஆனால் எங்களுக்கு நாட்டன்பு மொழியன்பு முதலியன எவ்வகையிலும் தெய்வ நாட்டத்தினும் குறைந்ததாகத் தோன்றவில்லை. வெறும் தெய்வ நாட்டமும் வெறும் நாட்டன்பும் வெறும் மொழியன்பும் இருந்து பயனில்லை என்றும், வெறும் நாட்டன்பும் வெறும் மொழியன்பும் இருந்தாலும் தவறில்லை, இவற்றை விட்ட வெறும் தெய்வ நாட்டம் தெளிவில்லாதது, பெரிய பயனைத் தாராதது என்றும் விளக்கமாகத் தெரிகிறது. ஆசிரியர் அவர்களும் தணிகைச் சொற்பொழிவில் இவ்வுண்மைகளைத் தக்கபடி விளக்கி, உள்ளபடியே முருகன்மீது உருக்கமும் ஈடுபாடும் உள்ளவர்கள், "முருகன் தமிழ்த் தெய்வம், அவன் உறையும் திருத்தணிகை தமிழகத்தைச் சேரவேண்டும்!" என்று சொல்வதற்குத் தயங்கமாட்டார்கள், அதற்கான கடமைகளைச் செய்யவும் பின்வாங்க மாட்டார்கள் என்று தெரிவித்தார்கள்.

அப்படியேதான் திருப்பதியைத் தமிழகத்தில் சேர்க்க வேண்டும் என்பதில் உண்மைத் தமிழ்நாட்டு வைணவர்களும், திருக்காளத்தி, திருவாலங்காடு பற்றி உண்மைத் தமிழ்நாட்டுச் சைவர்களும் கருத்தில்லாமல் கடமையாற்றாமல் இருக்கமாட்டார்கள்.

உடம்பைத் தந்து எப்படி உயிரைப் படிப்படியே இறைவன் வளர்த்துவருகிறானோ அதுபோல, அதற்குத் துணையாக இருக்கும் உடம்பைக்கொண்டு நடத்தும் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கவே இறைவன் உலகத்தில் பல மொழிகளையும் நாட்டையும் இயற்கையிலேயே அளவான பிரிவில் அரும்பச் செய்திருக்கின்றான். அவற்றைத் தக்கபடி ஓம்பிக்கொண்டு வாழ்க்கையில் படிப்படியே உயராமல் ஒன்றுபடுத்திவிடலாம் என்று (நல்ல எண்ணத்தாலேயேகூட.) எண்ணி ஒன்றோடு ஒன்று மோதவிடுவது நல்லதல்ல. அதனால் மேல் மேல் பிரிவும் பிளவுமே உண்டாகும். அப்படிச் செய்துகொள்வது வாழத் தெரிந்த, வாழும் நோக்கமுள்ள மக்களுக்கு உகந்ததல்ல. பிரிவில்லாமலே வாழவோ, பிரிவையே மிகுதிப்படுத்திக் கொண்டு வாழவோ முடியாது, இயற்கைப் பிரிவுகளை ஏற்றபடி ஓம்பி அவற்றுக்குள் ஒற்றுமை கொண்டு வாழவேண்டும். இயற்கைப் பிரிவுகள் மிகவும் ஆற்றலானவை. அவற்றை எண்ணிப் பாராமல் எதிர்ப்பது பாழ் (விபரீத) விளைவுகளை விளைத்துவிடக் கூடும்.

அவரவர்களும் தத்தம் மொழியும் நாடும் பீடு பெறவேண்டும் என்று எண்ணுவதும் முயல்வதும் குறுகிய நோக்கமாக முடியாது.

பாரத தேசம் போன்ற பல மொழியும் நாடும் கொண்ட ஒரு துணைக் கண்டத்துக்கு இந்தியாவை இயற்கை உணர்ச்சி என மதித்து நடப்பதுதான் வலிவும் உண்மை ஒற்றுமைக்கு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)